# நுண்கலையிலிருந்து கலை வரலாற்றுக்கு: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்கை நெறியாக கலை வரலாறு

*திருமதி. ஸ். கிருபாலினி[1], செல்வி. க. திவானி[2], கலாநிதி. தா. சனாதனன்[3], தகுதிகாண் விரிவுரையாளர்[1], தற்காலிக விரிவுரையாளர்[2], சிரேஸ்ட விரிவுரையாளர்[3],*

**நுண்கலைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**.

*kirupalini@univ.jfn.ac.lk*

***ஆய்வுச் சுருக்கம்*** *- கலை வரலாறு என்ற கற்கைப்புலமானது விசாரணையின் பொருளாகவும் வழிமுறையாகவும் காட்சியைக் கொள்கின்ற காட்சிசார் அறிவில் நிலைகொண்டுள்ளது. இது மனித உள்ளடக்கத்தின் மேலான மற்றும் தொடர்ச்சியான வெளிப்பாடாக கலை அமைகிறது என்பதை விசாரணை செய்கிறது. கலை வரலாறு காண்பியக்கலைகளின் உற்பத்தி அனுபவம், நுகர்ச்சி என்பவற்றின் வரலாற்றை ஆராய்கிறது. இவ்வாய்வுக் கட்டுரையானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தின் நுண் கலைத்துறையின் 'நுண்கலை' என அறியப்பட்ட கலை வரலாற்றுக் கற்கை நெறியின் பாடத்திட்டத்தில் கடந்த நான்கு சகாப்தங்களாக ஏற்பட்ட மாற்றங்களை அவற்றுடன் சம்பந்தப்பட்ட உள்ளூர்ப் பண்பாட்டு அரசியல் மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்களில் இதையொத்த பாடநெறிகளின் பாடத் திட்டத்தில் ஏற்பட்டுவந்த மாற்றங்கள் என்பனவற்றின் பின்னணியில் வாசிக்க முயல்கிறது. பாடத் திட்டத்தின் பாடப்பரப்பு, கோட்பாட்டுச் சட்டகங்கள் அணுகுமுறைகள், ஆய்வு முறை மற்றும் முறையியலின் அடிப்படையில் காலனியத்தினூடு தென்னாசியாவிற்கு அறிமுகமான கலை வரலாறு என்ற கற்கைப் புலம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்கொண்ட சவால்கள் எதிர்வினைகள், தன்வயப்படுத்தல்கள், மாற்றங்கள் என்பவற்றை இது ஆராய்கிறது. நுண் கலைத்துறையின் ஆவணங்கள், பத்திரிகைச் செய்திகள், பாடத்திட்டங்கள், கையேடுகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் வெளியீடுகள், கற்கைநெறி மதிப்பீட்டு அறிக்கைகள்; மற்றும் நேர்காணல்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சமூக வரலாற்று அணுகுமுறையினூடான வாசிப்பாக இது அமைகிறது.*

***திறவுச்சொற்கள் -*** *கலை வரலாறு, பாடத்திட்டம், நுண்கலை, சமூகப் பங்களிப்பு, கருத்தியல்*

**அறிமுகம்**

*கலை வரலாறு என்ற கற்கைப் புலமானது விசாரணையின் பொருளாகவும் வழிமுறையாகவும் காட்சியைக் கொள்வதோடு காட்சிசார் அறிவில் நிலைகொண்டுள்ளது. 1840களில் ஜேர்மனியில் பல்கலைக்கழக பாடவிதானத்தினுள் முதன்முதலாகக் கலை வரலாறு ஒரு கற்கை நெறியாக உள்வாங்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் அமெரிக்காவில் இத்துறை சார்ந்து பல கற்கை நெறிகளும் பேராசிரிய நிலைகளும் மாணவர்களும் உயர்நிலைப் பட்டப் படிப்புகளும் உருவாக்கப்பட்டன. அமெரிக்காவுடன் ஒப்பிடுகையில் இத்துறையின் வளர்ச்சி இதேகாலத்தில் ஐரோப்பாவில் சற்றுக் குறைவாகவே காணப்பட்டதாக டெனால் பிரெசியேசி குறிப்பிடுகிறார்.[1] இருபதாம் நூற்றாண்டில் இந்தநிலை மேலும் விரிவடைந்தது. ஐரோப்பாவிலும் அதன் குடியேற்ற நாடுகளிலும் இத்துறையின் புலமைசார் நிறுவனமயமாக்கமானதோடு அக்கால அரசியல் மற்றும் சமூக தரிசனங்களுடன் பின்னிப் பிணைந்தது. அந்தவகையில் தத்துவம், இலக்கியம், வரலாறு, தொல்லியல் மற்றும் மதம்சார் கற்கைகளுடன் தொடர்புபட்டதாக கலையும் கலை வரலாறும் அறிமுகப்படுத்தப்பட்டன[2]. தென்னாசியாவில் இத்துறை பல்கலைக்கழக கல்வியினுள் நுழைய முன்னர் ஆசிய வேதியியற் சங்கங்கள் (Asiatic Society), கல்கத்தா மற்றும் சென்னையில் இயங்கிய கீழைத்தேயவாதப் பள்ளிகள் மற்றும் அரும்பொருளகங்கள் போன்ற காலனிய நிறுவனங்களில் நிலைகொண்டிருந்தது. இதனால் இத்துறை காலனிய அதிகாரக் கருத்தாடலின் வெளிப்பாடாகவும் அந்த அதிகாரத்தைக் கட்டமைக்கும் ஒன்றாகவும் காணப்பட்டது. அதேவேளை காலனியத்துக்கு எதிராகத் தேசியவாதங்கள் மேற்கிளம்பியபோது அவை கலை வரலாற்றை தமக்கானதாக தகவமைத்துக் கொள்ளப் போட்டியிட்டன. புதிய தேசங்கள் தமது கலை வரலாற்றில் காலனியம் அறிமுகம்செய்த ஆய்வுச் சட்டகமும் எடுகோள்களும் பாகுபாடுகளும் மாற்றமற்றுப் பெரும்பாலும் தொடரப்பட்டன.*

*இலங்கையைப் பொறுத்தமட்டில் கொழும்பில் இயங்கிய இலங்கை வேதியியற் சங்கத்தின் முன்னோடி முயற்சிகள்*

---

[1] Preziosi Donald, (1998) “Art History: Making the Visible Legible”. In Donald Preziosi ed. The Art of Art History: A Critical Anthology.Oxford; OUP.
[2] Ibd.

*முக்கியமானவை. அது தொல்லியலையும் கலை வரலாற்றையும் இனக்கோட்பாட்டுடன் இணைத்ததுடன் ஆரிய மேன்மையை முன்னிறுத்தியது. இலங்கையில் ஆரம்பக் கலை வரலாற்றாசிரியர்களாகப் பெரும்பாலும் தொல்லியலாளர்களே காணப்பட்டனர். இலங்கையில் தொல்லியல், சிங்கள பௌத்த தேசியவாதத்தாலும் பேரினவாதத்தாலும் வழிநடாத்தப்படும் துறையாக இருப்பதால் நவீனத்துக்கு முற்பட்ட இலங்கைக் கலை பற்றிய வரலாறும் அதே போக்கைக் கொண்டுள்ளது. அத்தோடு வரலாறு, தொல்லியல் மற்றும் பௌத்த, இந்து, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய நாகரிகங்கள் போன்ற கற்கைநெறிகளின் பாட அலகுகளினூடாக இலங்கைப் பல்கலைக்கழகங்களில் கலை வரலாற்று உள்ளடக்கங்கள் பெரும்பாலும் கடத்தப்பட்டன.*

*இன்று உலகப் பல்கலைக்கழகங்களில் கலை வரலாறு என இனங்காணப்படும் துறையானது 1980களுக்கு முன்னர் 'நுண்கலை' என்ற பெயரிலேயே பெரும்பாலும் அறியப்பட்டது*[3] *. இருப்பினும் சமூகவியல் மற்றும் பண்பாட்டுக் கற்கைகள் போன்ற புலமைப் புலங்களின் வருகையானது 'நுண்கலை' என்ற பதத்திற்குப் பின்னாலுள்ள இனம், வர்க்கம், பால்நிலை, இடம் சார்ந்த ஏற்றத்தாழ்வுகளை விமர்சனத்துள்ளாக்கின. இதனால் பல பல்கலைக்கழகங்கள் 'நுண்கலை' என்ற பதத்தினைத் தவிர்க்கத் தொடங்கின. இலங்கைப் பல்கலைக்கழகங்களான களனிப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜெயவர்த்தனப் பல்கலைக்கழகம் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகம்*

---

[3] Fine arts *என்ற பதப் பிரயோகத்தை முதன் முதலாகக் கையாண்டவர்களுள் ஒருவரான பிரஞ்சு தத்துவவியலாளரான சார்ள்ஸ் பற்றியுக் (Charles Batteux) 1747இல் பிரஞ்சு மொழியில் 'Beaux Art' என்ற பதப் பிரயோகத்திற்கு நிகராக நுண்ணியமான, அபரிமிதமான, நுணுக்கமாக உருவாக்கப்பட்ட அழகையும் நல்ல உணர்ச்சிகளையும் அடிப்படையாகக் கொண்ட கலையைக் குறிக்க 'Fine' மற்றும் 'arts' என்ற வார்த்தைகளை ஒன்றிணைத்தார். மேலைத்தேயத்தில் நாளாந்தப் பயன்பாடு அற்ற அல்லது உயர் கலைவடிவங்களைக் குறிக்க Fine Arts என்ற இப்பதம் 'அலங்காரக்கலை' அல்லது 'பிரயோகக் கலை' என்பதற்கான எதிர்ப்பதமாக உபயோகிக்கப்பட்டது. பொதுப்பயன்பாட்டில் ஓவியம், சிற்பம் மற்றும் கட்டடக்கலையை பற்றியது எனினும் கவிதை மற்றும் இசையையும் இது உள்ளடக்கியது. 'Fine Arts' என்ற பதம் 18ஆம் நூற்றாண்டு வரை பயன்பாட்டுக்கு வரவில்லை. சார்ல்ஸ் பற்ரியக்ஸ் கலையை பயன்பாட்டுக்கலைகள் மற்றும் அழகுக்கலைகள் (கவின் கலைகள்) (சிற்பம், ஓவியம், இசை, கவிதை) மற்றும் பயன்பாட்டையும் அழகையும் உள்ளடக்கியவை (கட்டடம்) என்று மூன்றாக வகுத்தார். அதனைத்தொடர்ந்து டி'அலம்பேர்ட் (D'Alembert) என்ற தத்துவஞானி நுண்கலைகளை ஓவியம், சிற்பம், கட்டடம், கவிதை, இசை என்பதாகப் பட்டியலிட்டார். இது இங்கிலாந்தில் "பஞ்ச கலைகள்" ("five arts") என்பதாக அறியப்பட்டது. ஆங்கில அகராதிகள் 'Fine Arts' என்பதைப் படைப்பாக்கமாகவும் குறிப்பாகக் கற்பனை, அழகியல் மற்றும் அறிவுசார் உள்ளடக்கத்திற்கான அடிப்படையில் நயக்கப்படுகின்ற காண்பியக்கலை என்பதாக அர்த்தம் கொள்கின்றன. அதேவேளை நாட்டியமும் நாடகமும் அவைக்காற்று கலைகளாகக் கொள்ளப்பட்டன.*

என்பனவற்றிலே இத்துறையானது ‘நுண்கலை’ என்ற பெயரிலே அறிமுகப்படுத்தப்பட்டு தொடர்ந்தும் அப்பெயரிலே இருப்புச் செய்கின்றன. பெரும்பாலான இப்பல்கலைக்கழகங்களில் ஆற்றுகைக் கலையான நாடகம், இசை, நடனம் என்பவற்றுடன் காண்பியக் கலைகளான கட்டடம், ஓவியம், சிற்பம் அத்துடன் சினிமா மற்றும் தொலைக்காட்சி சார்ந்த உள்ளடக்கங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. வேலைவாய்ப்பு உள்ளிட்ட நோக்கங்களுக்காக கலைப் படைப்பின் உற்பத்திசார் திறன்களை விருத்திசெய்யும் செய்முறைசார் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

இலங்கைப் பல்கலைக்கழக நுண்கலைப் பாட விதானங்களையோ அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட நுண்கலைப் பாட இளமாணிக்கற்கை நெறிக்கான அடைவு மட்டத்தையோ நோக்கும் போது அவை உலகத்திலுள்ள பிரசித்திபெற்ற பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகிற கலை வரலாற்று கற்கை நெறிகளின் உள்ளடக்கங்களிலிருந்து பாரிய விலகலை எடுத்துக் காட்டுகின்றன. காண்பிய மற்றும் அவைக்காற்றுக் கலைகளின் செய்முறை மற்றும் அறிமுறைப் பாடங்களின் குறிக்கோள் அற்ற தொகுப்பாக அவை காணப்படுவதுடன் இக் கற்கைநெறியின் இறுதியில் மாணவர் வளர்த்துக்கொண்டிருக்கக்கூடிய துறைசார் ஆற்றல்கள் மற்றும் பண்புகள் பற்றிய தெளிவான பார்வையோ நோக்கமோ அற்றதாகக் காணப்படுகின்றன. ஒருவகையில் தேசியவாதங்கள், கீழைத்தேயவாதம், காலனியவாதம் என்பவற்றால் கட்டப்பட்ட நுண்கலை என்ற வெகுசன நம்பிக்கையை (Popular belief) இவை வெளிப்படுத்தி நிற்கின்றன. இலங்கையில் கலை வரலாறு சார் அறிவையும் விற்பனத்துவத்தையும் வேண்டும் செயற்பாடுகளின் எண்ணிக்கை குறைவானது என்பதோடு கலை வரலாற்றையும் கலைப் பயில்வையும் கலைக் கல்வியையும் தொல்லியலையும் பிரித்துபார்க்க முடியாத நிலையும் இத்துறையின் கற்கை மற்றும் ஆய்வுப் புலங்கள், முறையியல் என்பன தொடர்ந்து வரையறுக்கப்படாமைக்கான காரணங்களாகின்றன. மேலும் கலைஞர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட பல்கலைக்கழகப் பாடநெறிகளும் ‘நுண்கலை’ என்று அறியப்படுவதானது[4] கலையின் வரலாறு மற்றும் கோட்பாடுசார் வியாக்கியானத்தை அடிப்படையாகக் கொண்ட கலை வரலாறு,

[4] Beyond Boundaries one hundred years of humanities and social sciences in Sri Lankan Universities. Volume I: Humanities, p. 296.

*நாட்டியவியல், இசையியல் போன்ற துறைகளின் வளர்ச்சிக்கு இடையூறாக இருந்து வருகின்றது. மேலும் இன்று காண்பியக் கலைகளைக் குறிக்கும் பொதுவழக்காக 'நுண்கலை' என்ற பதம் காணப்பட்டாலும் இலங்கையில் அது இசையையும் நடனத்தையுமே குறிப்பதாகவே நோக்கப்படுகிறது.*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது நுண்கலைத்துறையைத் ஸ்தாபித்த போதும் பின்னர் நுண்கலை என்ற கற்கை நெறியைத் தொடங்கியபோதும் இதே நிலை தான் முறையியல் மற்றும் ஆய்வுப் பரப்பு சார்ந்து நிலவியதை அவதானிக்கமுடிகிறது, ஆனால் தொடர்ந்து நிகழ்ந்த பாடவிதான சீர்திருத்தங்களும்; பண்பாட்டு மாற்றங்களும் வெளித்தொடர்புகளும் அதன் அணுகுமுறையும் முறையியலும்; கலை வரலாற்றை நோக்கி நகர்த்தியுள்ளதைப் பிற உலகப் பல்கலைக்கழகங்களிலுள்ள பாடத்திட்டங்களின் கருத்துருவ மற்றும் முறையியல்சார் பரிணாம வளர்ச்சியைக் கருத்திலெடுத்துள்ளமையையும் அவதானிக்கமுடிகிறது. மேலும் 2020 ஆம் ஆண்டு, நுண்கலைக் கற்கை நெறியானது 'கலை வரலாறு' எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியுடன் பெயர் மாற்றம் செய்யப்பட்டமையானது, இத்துறையை இலங்கையில் வரையறை செய்யும் ஒரு முக்கிய பாய்ச்சல் முயற்சியாகும். அந்தவகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைப் பாட நெறியானது கலை வரலாறாக வரையறை செய்யப்பட்ட மாற்றத்தைக் கிட்டத்தட்ட நாற்பது ஆண்டு கால ஓட்டத்தில் நிகழ்ந்த பாடத்திட்ட சீர்திருத்தங்களினூடு வாசிக்கவும் இந்த பாடத்திட்ட மாற்றங்களை ஊக்குவித்த அக மற்றும் புறக் காரணிகளையும் திரைவிலக்கவும் முயல்கிறது. காலனியத்தால் அதன் தேவைகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட கலை வரலாறு என்ற கற்கைப் புலத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தகவமைத்த அல்லது பெயர்ப்புச் செய்த பொறிமுறையைக் பாடத்திட்டங்களினூடு ஆய்வு செய்வதாகவும் அமைகின்றது.*

***யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைத்துறை***

*தமிழ் பண்பாட்டின் அடையாளமாக 1974 இல் யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஆரம்பத்திலிருந்தே நுண்கலைத்துறையின் தேவையை உணர்ந்து கொண்டது. ஏற்கனவே சேர். பொன் இராமநாதனின் மருமகனான திரு. சு. நடேசபிள்ளையினால் ஆரம்பிக்கப்பட்ட நுண்கலைக்கழகத்தைப் பல்கலைக்கழகத்தினுள் உள்வாங்கி இசை மற்றும் நாட்டியக் கலைக்*

கல்வியைப் பல்கலைக்கழக கல்வி மட்டத்துக்கு உயர்த்துவதை நோக்கமாகக்கொண்டு 1982இல் நுண்கலைத்துறை தாபிக்கப்பட்டது. இந்த முன்னெடுப்புக்கு தென்னிலங்கையில் களனிப் பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த இதையொத்த மாற்றம் ஊக்கியாகச் செயற்பட்டிருக்கலாம். இலங்கையில் சிங்கள பௌத்த தேசியவாதமானது புதிதாக உருவாகிய இலங்கைத் தேசத்தின் இறந்த காலத்தை சிங்கள பௌத்த இறந்தகாலமாக கட்டமைக்க தொல்லியல், வரலாறு, கலை வரலாறு போன்ற துறைகளினூடு முனைந்து கொண்டிருந்தது. இனமுரண்பாட்டையும் நாட்டின் வரலாற்றையும் பண்பாட்டையும் ஒரு இனக்குழு உரிமை கோரலுடன் சம்பந்தப்படுத்தி வளர்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைத்துறையின் தாபிப்பு என்பது ஒரு தற்செயலான நிகழ்வல்ல. அதற்கு வரலாற்று முக்கியத்துவமும் தேவையும் உள்ளது. அது தமிழ்ப் பண்பாட்டு அடையாளத்தின் இறந்தகாலத்தின் சுமையாலும் எதிர்காலம் பற்றிய எதிர்பார்ப்புகளாலும் கட்டப்பட்டது எனலாம்.

புதிதாக தாபிக்கப்பட்ட நுண்கலைத்துறையின் முதல் துறைத்தலைவராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னோடிகளில் ஒருவரும் வரலாற்றாசிரியரும் தொல்லியலாளருமான பேராசிரியர். கா. இந்திரபாலா பணியாற்றினார். கர்நாடக இசை மற்றும் நடனத்தில் டிப்ளோமாப் பாடநெறியைத் தொடரும் மாணவர்களுக்காகக் கலை வரலாறு மற்றும் கோட்பாடுசார் புரிதலை வழங்கவென முதன்முதலாகத் "தென்னாசியக்கலை" என்கிற பாட அலகை அவர் அறிமுகம் செய்தார். பேராசிரியர் கா. இந்திரபாலா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தனது பணிக்காலத்தில் 'தென்னாசிய மன்றத்தில்' கலந்துரையாடல்களைத் *(South Asian Forum)* தொடர்ந்து நிகழ்த்தியதுடன் கலைப்பீடத்திலிருந்து வெளிவந்த ஆங்கில ஆய்வேட்டிற்கு 'தென்னாசியக் கற்கைகளுக்கான ஆய்வேடு' *(Journal of South Asian Studies)* எனப் பெயரிட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் இப்பிராந்தியத்தில் தென்னாசியா என்ற சட்டகத்தையும் அடையாளத்தையும் புலமைசார் துறைகளில் முன்னிறுத்திய முன்னோடிகளில் ஒருவராக அவரை இனங்காணலாம். தென்னாசியா மற்றும் 'தென்னாசியக்கலை' என்ற பதப் பிரயோகத்தை ஆழ்ந்து நோக்கும் போது அது வரலாற்றுப் போக்குக்கு எதிரான குறுகிய தேசியவாத இனங்காணல்களுக்கு அப்பாற்பட்டது. அன்றைய அவரது சக புலமையாளர்களைப்போல 'இலங்கைக்கலை,' 'சிங்களக் கலை,' 'பௌத்தக் கலை,' அல்லது 'தமிழ் இந்துக்கலை' என அவர் இந்தப்பாட

*அலகிற்கு பெயரிடாமையானது அவரது பரந்துபட்ட நோக்கு நிலையையும் மேலெழுந்துவரும் தேசியவாதங்களின் அலைக்கு மாற்றான போக்கையும் முன்வைப்பதாகக் கருதலாம். இதே காலத்தில் வரலாறுக்கற்கை நெறியில் இந்து மற்றும் கிறிஸ்தவ நாகரிகத் துறைகளின் பாடத்திட்டங்களுள் கலை சார் உள்ளடக்கங்கள் அடக்கப்பட்டிருந்தன.*

*நுண்கலைத்துறை உருவாகி மூன்று வருடங்களின் பின்னர், 1985ஆம் ஆண்டு பேராசிரியர். கா. சிவத்தம்பியின் தலைமைத்துவத்தின் கீழ் 'நுண்கலை' பொதுக் கலைமாணிப் பட்டத்துக்குரிய பாடமாக அறிமுகமானது. 1986 இல் நாடகமும் அரங்கியல் நுண்கலைத்துறைக்குள் இன்னொரு பாடநெறியாக அறிமுகமானது. நுண்கலையில் சிறப்புக் கலைமாணிப் பட்டக் கற்கைநெறி 1991 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாண்டிலே இசை மற்றும் நடனத்துக்கான தனித் துறைகள் உருவாக்கப்பட்டதுடன் அவற்றின் நிர்வாகம் நுண்கலைத்துறையிலிருந்து பிரிந்து சென்றது. மேலும் இசை மற்றும் நடனக் கற்கைகள் இளமாணிப் பட்டப் படிப்புகள் ஆக்கப்பட்டபோது "தென்னாசிய கலை" எனப்பட்ட பாட அலகானது துரதிஸ்டவசமாக பாடத்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டது.*

**நுண்கலை: முதலாம் பாடத்திட்டம்**

*"வரலாற்றுச் செயற்பாடுகள் என்பன வெறும் சம்பவங்களல்ல. அவற்றுள் ஓர் உட்புறம், அதாவது ஒரு சிந்தனைப் புறம் உள்ளது."[5] என வரலாற்றியலறிஞர் ஆர் சி. கொலிங்வூட் கூறுவதற்கிணங்க பாடத்திட்டத்தில் இடம்பெற்ற மாற்றங்கள் என்பது வெறுமனே பாடப் பரப்பை அகலித்தல் அல்லது உலகப் பொதுவான உள்ளடக்கத்தினை விநியோகம் செய்தல் என்பதாக மட்டும் நோக்கமுடியாது. பாடத்திட்டத்தைத் தயாரித்தவர்களின் கருத்துநிலை, அவர்களின் கல்விப் பின்புலம், உலகளாவிய ரீதியில் குறித்த துறையில் ஏற்பட்ட மாற்றங்கள், இலங்கைப் பல்கலைக்கழக பாடத்திட்டங்களின் எதிர்பார்ப்புகள், அரச கொள்கைகள் மற்றும் தொழில்துறைசார் எதிர்பார்ப்புகள் சமுதாயத்தின்; அபிலாசைகள் என்ற பல்வேறு விசைகளின் சந்திப்பே ஓர் பாடத்திட்டமாகும்.*

*நுண்கலைகள் பயிலப்படுவை என்பதற்கப்பால் பண்பாட்டின் சுட்டியாகவும் இனத்தின் அடையாளமாகவும் நோக்கப்பட்ட*

---

5 *சிவத்தம்பி, யாழ்ப்பாணத்தில் புலமைத்துவ மரபு ஓர் இலக்கிய வரலாற்றுக் கண்ணோட்டம்*

*பின்புலத்தில் இக்கற்கை நெறி மீதான சமூக மற்றும் அரசியல் ரீதியான எதிர்பார்ப்பு மிக அதிகம். அதுவும் சுட்டிப்பாகத் தமிழ் தேசியம், ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம், 1980களில் ஈழத்துத் தமிழ் இலக்கியம், நாடகம், ஓவியம் போன்ற துறைகளில் ஏற்பட்ட புத்துணர்ச்சி என்பனவற்றின் பின்னணியில் நுண்கலை போன்ற ஓர் கற்கைத் துறையின் சமூக வகிபாகம் யாது? துறைசார் நிபுணத்துவமோ முழுமையான துறைசார் வெளியீடுகளின் சேகரிப்புகளோ வெளியுலகத் தொடர்புகளோ அற்ற நிலையில் "படித்துப் படித்துப் படிப்பிக்கலாம்" என்ற அப்போதைய துணைவேந்தரான பேராசிரியர் சு. வித்தியானந்தனின் நம்பிக்கையைப் பின்பற்றிய ஒரு சோதனை முயற்சியாகவே முதலாவது பாடத்திட்டம் முன்வைக்கப்பட்டது.*

*இக் கலைத்திட்டத்தை பேராசிரியர். கா. சிவத்தம்பி தொல்லியலாளரும் கலை வரலாற்றாசிரியரும் களனிப் பல்கலைக்கழக விரிவுரையாளருமான சேனக்க பண்டாரநாயக்காவின் உதவியுடன் உருவாக்கினார். இருவருக்குமிருந்த மாக்ஸியப் பின்புலம் பாடத்திட்டத்தில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. அது 'நுண்கலை' எனும் பரந்த எண்ணத்தை உள்ளடக்கியிருந்ததோடு கலைக்கும் பண்பாட்டுக்குமுள்ள உறவினாலே கலையானது சமூகத்தினை எடுத்துணர்த்தும் உயிர்ப்பு மையமாக அமைகின்றது எனும் றேமன் வில்லியம்ஸின் கருத்துக்கமைய கலையின் சமூகவியல், மானிடவியல் மற்றும் தொடர்பாடல் முக்கியத்துவத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது[6] . உள்ளூரில் வெகுசனக் கருத்தாடலில் இருந்த நுண்கலையின் தெய்வீக உற்பத்தி பற்றிய நம்பிக்கையைத் தாண்டி அதை சமூக வெளிப்பாடாக வரையறுத்தமையானது பாடத்திட்டத்திற்கு வலுவான அடித்தளத்தை வழங்கியது. உள்ளூர் கலை வெளிப்பாடுகளை ஆராய்வதில் மேற்கத்தேயச் சிந்தனைகளையும் இந்தியக் கலை மரபையும் அறிவதன் முக்கியத்துவத்தைக் பாடத்திட்டம் தெளிவாக வெளிப்படுத்தியது. முதலாவது கலைத்திட்டத்தில் பேராசிரியர் கா. இந்திரபாலாவின் தென்னாசியக் கலை என்ற நோக்கு நிலையானது இந்திய, இலங்கை மற்றும் தமிழர் கலைகள் என்ற பிரிப்புகளால் மாற்றீடு செய்யப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.*

*1997/98 பாடத் திட்டத்தின் அமைப்பிலிருந்து அதன் பாடப் பரப்பினை ஆராய்ந்தால், பொதுக் கலைமாணி மாணவர்களுக்கு 'கலையின் வரலாறு மற்றும் கலைக் கோட்பாடுகள்,' 'கலை விமர்சனக்*

---

[6] Williams, Culture and society, 1780-1950.

கொள்கைகள் உள்ளடங்கலாக கலை மற்றும் அழகியல்' எனும் கோட்பாடுகள் சார் இரு அலகுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன[7] . குறிப்பாகத் 'தமிழர் கலைகளின் வளர்ச்சியை விசேட உசாவலாகக் கொண்ட இந்தியக் கலையின் வளர்ச்சி,' 'இலங்கைக் கலை மற்றும் கைவினை' போன்ற பிராந்திய, இன அடிப்படையிலான கலை சார்ந்த இரு அலகுகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. மூன்றாம் வருடக் கற்கையைப் பூர்த்தி செய்வதற்கு நுண்கலைத்துறை சார்ந்த விடயப் பரப்பிலிருந்து தலைப்பொன்றைத் தெரிவு செய்து ஆய்வுக் கட்டுரை எழுதுதல் அல்லது ஆக்கக்கலை முயற்சியை அளிக்கை செய்தல் வேண்டும். இக்காலத்தில் நடனம், சங்கீதம் ஆகிய பின்னணியிலிருந்து மாணவர்கள் இக்கற்கை நெறியைத் தெரிவு செய்தமையால் ஆற்றுகை வடிவத்தை அளிக்கை செய்வதற்கும் வாய்ப்பளிப்பதாக பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டிருந்தது, எனினும் அவற்றைப் பயில எந்த வாய்ப்பையும் பாடத்திட்டம் கொண்டிருக்கவில்லை. கலை வரலாறு கோட்பாடு சார் பாட அலகுகள், காண்பியக் கலையில் தமது கவனத்தைக் குவித்திருந்த சந்தர்ப்பத்தில் ஆற்றுகைக்கான சம்பந்தம் எங்கிருந்து உருவானது என்பது இங்கு எழும் கேள்வியாகும். இது நுண்கலைகள் என்றால் சங்கீதமும் நடனமும்தான் என்ற யாழ்ப்பாணத்தவரின் எதிர்பார்ப்புக்கும் உலகப் பல்கலைக்கழகங்களில் காண்பியக் கலைகளே நுண்கலைகளாக விளிக்கப்பட்ட நடைமுறைக்கும் இடையிலான ஓர் சமரசமாக நோக்கப்படலாம்.

சிறப்புக் கலைமாணிப் பாடத்திட்டத்துக்கான முதலாவது பாடத்திட்டத்தை நோக்கின், இலங்கைக் கலை, இந்தியக் கலை, ஐரோப்பியக் கலை, கலையில் நவீனவாதம் மற்றும் பின்நவீனவாதம் என்பவை கலை வரலாறு சார் அலகுகளாகவும், தமிழர்களின் பண்பாட்டு உருவாக்கமாகக் கலை, இலங்கைத் தமிழர்களிடையே கலை மற்றும் கைவினை என்பவை தமிழர், தமிழ் சார் சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் பாட அலகுகளாகவும், புகைப்படம், திரைப்படம் போன்ற தொழிநுட்பக் கலை சார்ந்த அலகுகளும், இந்திய அழகியல், கலை மற்றும் தொடர்பாடல், அழகியலும் கலைக் கோட்பாடுகளும், கலை வரலாற்று முறைமைகள் மற்றும் பிரச்சினைகள் போன்ற கோட்பாடுகள் சார் அலகுகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. இறுதியாண்டில் சமர்ப்பிக்கப்படும் ஆய்வுக்கட்டுரைக்கு மாற்றாக ஆற்றுகையையும் மேற்கொள்ளலாம் என்பது இங்கும் அனுமதிக்கப்பட்டது.

---

[7] Proposed curriculum of the Department of Fine Arts for General and special, 1997/1998.

இந்திய இசை மற்றும் நாட்டிய மரபு பற்றிய ஒரு பாட அலகாக கலையில் 'இந்திய மரபுரிமை-*II*' சேர்க்கப்பட்டிருந்தாலும் மேலைத்தேயத்தில் ஆற்றுகை வடிவங்களைக் கற்பதற்கான எந்தப்பாட அலகுகளும் காணப்படவில்லை. 'மேலைத்தேயக்கலை' வரலாறு பாட அலகானது காண்பியக்கலையின் பரிணாம வளர்ச்சியை அடியொட்டி அமைந்திருந்தாலும் பீத்தோவன்; இசை மட்டும் இடைச்செருகலாக உள்வாங்கப்பட்டிருந்தது. மேலும் 'இந்திய மரபுரிமை-*I, II*' எனும் இந்தியக்கலை பற்றிய பாட அலகுகளில் மத்திய காலக் கலைக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை நவீன காலம் பெறவில்லை. இந்தியக் கலை மத்திய காலத்தைத் தாண்டி வளரவில்லை என்ற தோற்றப்பாடே பாடத்திட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியக் கலை பற்றிய முன்வைப்புகள் ஆனந்த குமாரசாமியின் பார்வை முறையைப் பிரதிபலித்த அதே வேளை மேலைத்தேயக் கலை கொம்பிரிஜ் மற்றும் காடினரைப் பின்பற்றியிருந்தது.

'இலங்கைக் கலை' வரலாறானது அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் கண்டி இராட்சியங்களையும் 43 குழுவையும் உள்ளடக்கியிருந்தது. மேலைத்தேயக் காலனியத்தின் செல்வாக்குக்குட்பட்ட கலை பற்றிய அறிமுகத்தைக் கூடப் பாடத்திட்டம் கொண்டிருக்கவில்லை என்பது இங்கு கவனிக்கப்படவேண்டும். 'கலையும் கைவினையும்' என்ற பாட அலகானது ஆனந்தக் குமாரசாமியின் 'மத்திய காலச் சிங்களக்கலை' மற்றும் கலைப்புலவர் நவரத்தினத்தின் 'யாழ்ப்பாணக் கைவினை' என்பனவற்றின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டிருந்தது. இது கைவினை பற்றிய தரவுகளுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை அது பற்றிய விமர்சன ரீதியான புரிதலுக்குக் கொடுக்கவில்லை எனலாம். கைவினையை இலங்கை மற்றும் இந்தியாவுடன் மட்டும் தொடர்புபடுத்த எடுத்த முயற்சியானது கீழைத்தேயவாத மற்றும் மேலைத்தேய நவீனவாத சிந்தனைகளை ஒப்புவிப்பதாக அமைந்திருந்தது. நிறைவாக இப்பாடத்திட்டம் 'கலை வரலாறு' என்ற கற்கைப் புலத்திற்கும் 'நுண்கலை' என்ற பாடநெறிக்குமிடையிலான பேச்சுவார்த்தை தொடங்கும் ஓர் புள்ளியைக் குறித்து நிற்கிறது. அதேவேளை யாழ்ப்பாணத்தில் இருந்துகொண்டு கலை வரலாற்றை வாசிப்பது அல்லது முன்வைப்பது என்ற சவாலை எவ்வாறு எதிர்கொள்வது என்பதற்கான வழிகளையும் அது தேடுகிறது. அத்தோடு முதன் முதலாக கலை வரலாற்றைத் தமிழ் மொழியில் கற்பிக்க எடுத்த முயற்சியின் பின்னாலுள்ள பல சாத்தியப்பாடுகளையும் இடர்பாடுகளையும் இது எடுத்துக் காட்டுகிறது.

**இரண்டாவது பாடத்திட்டம்: காண்பியக் கலைகளின் வரலாறு**

*2000 ஆம் ஆண்டில் கலைப்பீடக் கற்கை நெறிகள் வருட அடிப்படையிலிருந்து பருவ கால(semester) அடிப்படையிலானதாக மாற்றப்பட்டன. இதனடிப்படையில் பாடத்திட்டத்தின் கட்டமைப்பு பாரிய மாற்றத்திற்குள்ளானது. பேராசிரியர் கா. சிவத்தம்பி இளைப்பாறிச் சென்றிருந்த நிலையில் அவரால் முன்வைக்கப்பட்ட முதலாவது பாடத்திட்டத்தின் பாடப் பரப்புகளை அடியொட்டியதாகவும் அவற்றின் சில பகுதிகளின் விரிவுபடுத்தலாகவும் இரண்டாவது பாடத்திட்டம் அமைந்தது. உதாரணமாக 2000க்கு முன்னர் முதலாம் வருடத்தில் காணப்பட்ட 'நுண்கலைக்கான அறிமுகம்' எனும் ஒரு அலகின் உள்ளடக்கம் நான்கு அலகுகளாக விரிக்கப்பட்டன. அவை 'நுண்கலையினைப் புரிந்துகொள்ளல்,' 'கலை ரசனை,' 'அழகியல் மற்றும் கலை வரலாற்றுக்கான அறிமுகம்' மற்றும் 'கலையில் மனிதப்பேறு' என்பனவாகும்.*

*இரண்டாம் பாடத்திட்டமானது நான்கு பிரதான உள்ளடக்கங்களைத் தெளிவாக வரையறுத்தது: மேலைத்தேயக் கலையின் வரலாறு, இந்தியக் கலையின் வரலாறு, இலங்கைக் கலையின் வரலாறு மற்றும் கலைக் கோட்பாடு. இவை கால ஒழுங்கின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டிருந்தன. இதன் அடிப்படை நோக்கமாகப் பண்பாடுகள், காலங்கள், இடங்கள் என்பவற்றுக்கிடையிலான ஒப்பிட்டு வேறு பிரித்தல், கலை என்ற கருத்துருவின் பரிணாம வளர்ச்சியைப் புரிதல் ஆகியன காணப்பட்டன. இந்தப் பாடத்திட்ட மீள் ஒழுங்கில் அவைக்காற்றுக் கலைகள் சார்ந்த உள்ளடக்கங்கள் நீக்கப்பட்டு காண்பியக் கலைகள் பற்றிய விடயப் பரப்பு மேலும் ஆழ அகலப்படுத்தப்பட்டது. இரண்டாம் வருடத்தில் 'ஆரம்ப நாகரிகங்களில் கலை,' 'பௌத்தக் கலை மற்றும் விக்கிரகவியல்,' 'கலை மற்றும் தொடர்பாடல்,' 'மத்தியகாலக் கிறிஸ்தவக் கலை,' 'மத்தியகால இந்தியக் கலை,' 'கலை மற்றும் கலை இரசனையின் இந்தியக் கோட்பாடுகள்' எனும் அலகுகள் வடிவமைக்கப்பட்டிருந்தன.*

*மூன்றாம் வருடத்தில் ஐரோப்பியக் கலையின் இரண்டாம் வருட அலகின் கால ரீதியான தொடர்ச்சியாக 'மறுமலர்ச்சி, மனரிசம், பாரூக்கோவின் கலை,' 'றொக்கக்கோ, நவ-செந்நெறிவாதம், மனோரதியம் மற்றும் யதார்த்தவாதத்தின் கலை' எனும் அலகுகள் அமைந்திருந்தன. அத்தோடு 'தமிழர்களின் கலைப் பேறு' இலங்கைக்*

கலையில் 'செந்நெறி மற்றும் பின் செந்நெறிவாதக் கலை' எனும் அலகுகள் காணப்பட்டன. கோட்பாட்டு அலகுகளாக 'மேற்கத்தேய அழகியல்,' 'வெளி, வடிவம் மற்றும் பிரதிநிதித்துவத்தில் இந்திய அணுகுமுறை' ஆகிய அலகுகள் அமைந்திருந்தன. 'மேற்கத்தேய அழகியல்' ஏலவே 'அழகியல் கோட்பாடுகள்' எனும் தலைப்பில் அமைந்த அலகினைத் துண்டாடுதல் வழி மேற்கத் தேயக்கலை வரலாற்றுக்குச் சமாந்தரமான கோட்பாடாகக் கற்பிக்கப்பட்டுள்ளது. இந்திய சிற்ப சாஸ்திர நியமங்களை அடிப்படையாகக் கொண்டு காண்பியக் கலைகளை வாசிப்புக்குட்படுத்துவதாக 'வெளி, வடிவம் மற்றும் பிரதிநிதித்துவத்தில் இந்திய அணுகுமுறை எனும் புதிய அலகு, இந்தியக் கலையில் நியமங்களின் முதன்மை, அழகியல், உள்ளூரிலுள்ள பயில்வுகள் என்பனவற்றைப் புரிந்துகொள்ள அத்தியாவசியமானதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இன்று வரையான பாடத்திட்டத்தில் தொடரப்பட்டும் இவ்வலகு கலை வரலாற்று வாசிப்பில் இலக்கிய மூலங்களின் வகிபாகத்தை அறிமுகம்; செய்யும்; முக்கிய திறவுகோலாகும்.

நான்காம் வருடத்தில், 'கலையில் நவீன வாதம், 'காலனிய வாதம், பின்காலனியவாதத்தின் கீழான இலங்கைக்கலை,' 'காலனிய வாதம், பின்காலனியத்தின் கீழான இந்தியக்கலை' என ஏற்கனவே இருந்த இந்திய, இலங்கைக் கலைவரலாற்று அலகுகள் விரிவாக்கப்பட்டு நவீன வாதம், காலனியவாதம், பின் காலனியவாதம் எனும் கோட்பாட்டுச் சட்டகங்களால் மீள்வடிவமைக்கப்பட்டன. அதேபோன்று 'தொழில்நுட்பக் கலைகள்,' 'இலங்கைத் தமிழரின் கலைப்பேறு' 'கலை வரலாற்று முறைமையியல் மற்றும் வியாக்கியானம்' என்பன முன்னர் காணப்பட்ட கலைத்திட்டத்தின் மீள் வடிவமைப்புகளாகும். 'கலையின் குறியியல்,'' 'கலையின் சமூகவியல்,' 'கலையின் உளவியல்,' எனும் பாட அலகுகள் இங்கு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்வலகுகளின் அறிமுகம் கலை வரலாறு என்பது பல்துறைசார் ஆய்வு முறைகளைக் கொண்ட கற்கை நெறி எனும் நிலைப்பாட்டை வலியுறுத்துவதாக அமைந்தது. இப்பாட அலகுகள் 2005 ஆம் வருடப் பாடத்திட்டத்தில் தொடரப்பட்டுள்ளதோடு, 2021 ஆம் ஆண்டு பாடத்திட்டத்திலும் மீள உள்வாங்கப்பட்டுள்ளன. 2000 ஆம் ஆண்டின் பாடத்திட்டத்தில் நிகழ்ந்த இன்னொரு முக்கிய மாற்றம் ஆற்றுகையினை ஆய்வுக் கட்டுரைக்குப் பதிலீடாகச் செய்யலாம் என்ற முறை நீக்கப்பட்டு சிறப்புக் கலைமாணி மாணவர்கள்; அனைவரும் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தல் கட்டாயமாக்கப்பட்டது.

**மூன்றாம் பாடத்திட்டம்: மரபுரிமையும் கலைக் கல்வியும்**

இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்துலுக்கு அமைவாக G.P.A முறைமை மற்றும் பிரதான பாடங்கள், துணைப் பாடங்கள் எனும் பாட வகைமைகளை உள்ளடக்கியதான புதிய பாடத்திட்ட மாற்றம் 2005 ஆம் ஆண்டு இடம்பெற்றுள்ளது[8]. இப்பாடத்திட்டத்தில் 2000 ஆம் ஆண்டுப் பாடத்திட்டத்தில் காணப்பட்ட அலகுகளுக்கு மேலதிகமாக 'மரபுரிமை முகாமைத்துவம்', 'நாளாந்தக் காண்பிய வெளிப்பாட்டுப் பண்பாட்டை வியாக்கியானப்படுத்துதல்', 'கலையின் குறியியல்' போன்ற சில புதிய அலகுகள் இணைக்கப்பட்டன.

போரும் இடப்பெயர்வும் யாழ்ப்பாணத்தின் கலைப்படைப்புகளுக்கும் மரபுரிமைச் சொத்துகளுக்கும் பலத்த அச்சுறுத்தலாக அமைந்தன. தொடர்ந்து 2002 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரை நீடித்த போர் நிறுத்தம் யாழ்ப்பாணத்து மரபுரிமைச் சின்னங்களை கொழும் பின் அரும்பொருள் சந்தையை நோக்கி நகர்த்தின. இக்காலகட்டத்தில் நுண்கலைத்துறையும் அதன் மாணவர் அமைப்பான 'கலைவட்டமும்' அரும்பொருள் பாதுகாப்பு சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்த பிரசாரத்தில் ஈடுபட்டன. இது நுண்கலைத்துறை தனது சமூக மற்றும் வரலாற்று வகிபாகத்தை உணரும் சந்தர்ப்பமாக மாறியது. அத்துடன் "ஒரு செழிப்பான பாரம்பரியத்தை மற்றவர்களுக்காக விட்டுச்செல்வோம்" எனும் மகுட வாசகத்துடன் நுண்கலைத்துறையின் மாணவர் அமைப்பாகிய 'கலை வட்டத்தால்' 2001 முதல் முன்னெடுக்கப்பட்ட "முதுசம்" நிகழ்ச்சித்தொடர்களும் மரபுரிமையை "பதித்தல், பயிலல் மற்றும் பகிர்தல்"; என்பதற்கான களமாக அமைந்தது. அதுமட்டுமன்றி 2002 ஆம் ஆண்டு "யாழ்ப்பாணக் கட்டடக்கலையைச் சூழமைவுப்படுத்தல்: பாணிகளும் அம்சங்களும்[9] என்ற தலைப்பிலான கருத்தரங்கை நுண்கலைத்துறை ஏற்பாடு செய்திருந்தது.'' இவை யாழ்ப்பாணத்தின் கலை வரலாறு பற்றிய புதிய பல தரவுகளை சேகரிக்க வழிகோலியதுடன் இலங்கைத் தமிழ்ச் சூழலில் நுண்கலைப் பாடத்திட்டம் பற்றிய மீள் சிந்தனைக்கும் வழிகோலியது.

சமூகத்திற்கான தேவை மற்றும் பொறுப்புணர்வு அடிப்படையில் 2005ஆம் ஆண்டு பாடத்திட்டத்தில் 'மரபுரிமை முகாமைத்துவம்;'

---

[8] Subject Review Report: Department of Fine Arts, p.4.

[9] "சூழமைவுபடுத்துதல்: யாழ்ப்பாணக் கட்டடக்கலைப் பாணிகளும் அம்சங்களும்" கருத்தரங்கு கையேடு

எனும் ஓர் அலகு மூன்றாம் வருடத்தில் விருப்பத் தெரிவாக அறிமுகமாகியது. தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் நிலவிய அரும்பொருள் கொள்ளை, வீதி அகலிப்பு அதனால் மரபுரிமைச் சொத்துகள் இழப்பு அவை பற்றிய அக்கறையீனம் ஆகியன இவ் அலகை இன்னும் அகலப்படுத்த வேண்டிய தேவையை உணர்த்த 2012இல் நிகழ்ந்த நான்காவது கலைத்திட்ட சீர்திருத்தத்தில் ‘மரபுரிமை: நிலைப்பு மற்றும் மீளளிப்பு,” “மரபுரிமை பாதுகாப்பு: பிரச்சினைகள் முறைகள்,” “மரபுரிமைத் தொழிற்துறைகள்,” “மரபுரிமையைக் காட்சிப்படுத்தல்: எடுத்தாளுகை, காட்சி மற்றும் கலை அருங்காட்சியகங்கள்” என மரபுரிமை பற்றிய நான்கு பாட அலகுகளை இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டில் விருப்பத் தெரிவாக அறிமுகப்படுத்தப்பட்டன. இதனூடு பாடத்திட்டத்திற்கு வெளியே சமூகச் செயற்பாட்டுவாதமாக மட்டும் காணப்பட்ட மரபுரிமை, புலமை சார் ஆய்வுக்கும் வியாக்கியானத்திற்கும் உரியதாக மாற்றம் கண்டதுடன் கலை வரலாற்றிற்கு ஒரு பிரயோக அர்த்தமும் உருவாக்கப்பட்டது. இதே பாடத்திட்டத்தில் சித்திர பாட பள்ளிஆசிரியர்களாக பணியாற்ற விரும்பும் மாணவர்கள் சித்திரமும் வடிவமைப்பில் நான்கு செய்முறைப் பாடங்களை விருப்பப் பாடங்களாக தெரிவு செய்து பயிலும் வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. இதனால் கலை வரலாற்றில் சிறப்புக் கற்கையை மேற்கொள்ளும் ஓர் மாணவர் மரபுரிமை முகாமைத்துவத்தில் அல்லது கலைக் கல்வியில் (Art education) இரண்டாம் சிறப்புக் கற்கை மேற்கொள்ள வழி எற்படுத்தப்பட்டதுடன் கலை வரலாற்றை தொழிற்துறையுடன் இணைக்கவும் வாய்ப்பு உருவானது.

2005 ஆம் ஆண்டில் ‘நாளாந்தக் காண்பிய வெளிப்பாட்டுப் பண்பாட்டை வியாக்கியானப்படுத்துதல்’ எனும் புதிய அலகின் அறிமுகமானது கலை வரலாற்றுக்குப் பின்னாலிருந்த வகுப்பு நிலை அல்லது உயர் கலை சார் சார்புநிலையை வெளிப்படையாக கேள்விக்குட்படுத்தியது. நவீனத்துவ நிலவரத்தின் முறையே உயர் மற்றும் வெகுசனப் பண்பாட்டின் இருவேறு காண்பிய வெளிப்பாடுகளாக நவவேட்கைவாதமும் வெகுசனக் கலையும் வரையறுக்கப்படும் நிலையில் நவீனத்துவத்தை அதன் முழுமையான அர்த்தத்தில் புரிந்துகொள்ள இப்பாட அலகானது அவசியமானது. அதேவேளை காண்பியப் பண்பாட்டுக் கற்கைகளின் ஆய்வு முறைகளையும் கருவிகளையும் கலை வரலாற்று மாணவர்கள் அறிந்து கொள்ளவும் பிரயோகிக்கவும் இது வாய்ப்பை வழங்கியது. தென்னாசியக் காட்சிப் பண்பாடு பற்றி பிற துறைசார் ஆய்வு

முயற்சிகளைப் பரீட்சயப்படுத்தும் சந்தர்ப்பமாகவும் இது அமைந்தது. யாழ்ப்பாணம் போன்ற பண்பாட்டுச் சூழலில் வெகுசனக்கலை மீதான புலமைசார் கவனமானது மாணவர்களின் பல ஆய்வுகளுக்கு கருப்பொருட்களை வழங்கியது.

தொழில்நுட்பக் கலை பற்றிய ஒரு பாட அலகு ஆரம்பப் பாடத்திட்டத்திலிருந்தே காணப்பட்டாலும் 2005 இல் மறுசீரமைக்கப்பட்ட பாடத்திட்டத்தில் திரைப்படம், ஒளிப்படம் பற்றி விரிவாகக் கற்பதற்காக ஒளிப்படம் மற்றும் திரைப்படத்தின் வரலாறு மற்றும் அழகியல் எனும் இரு அலகுகளோடு, 'ஒளிப்படம் மற்றும் திரைப்படத்தின் அடிப்படைகள் மற்றும் இரசனை' எனும் தலைப்பிலான விருப்புத் தெரிவுப் பாடமொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டன. இக்காலத்தில் நுண்கலைத்துறை பல புகழ்பெற்ற திரைப்படங்களின் சேகரம் ஒன்றை உருவாக்கியமை, சர்வதேச திரைப்பட விழாக்களின் ஒழுங்குபடுத்துநர்கள், பங்குதாரர்களாவதனூடு சர்வதேசத் திரைப்படங்களைப் பார்ப்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்தமை ஆகியனவும் இப்பாட அலகின் விடயப் பரப்பில் தொடர்ந்து பங்களிப்புச் செய்தன.

**நான்காம் பாடத்திட்டம்: தாக்குப்பிடித்தலுக்கான ஒடுக்கப்பட்டவர்களின் வரலாறு**

கலை வரலாற்றுக் கற்கைப் புலம் உலகளாவிய ரீதியில் மாறிக்கொண்டிருக்கும் கருத்தாடல்களையும் அணுகுமுறை மாற்றங்களையும் உள்ளூர்த் தேவைக்கேற்ப புதிய பாட அலகுகளை அறிமுகப்படுத்துவதற்கு எப்பொழுதும் முயற்சித்து வந்துள்ளது. 2012 இல் நான்காவதான பாடத்திட்ட வடிவமைப்பு இடம்பெற்றது. இதில் காண்பியக் கோட்பாடு மற்றும் சமகால கருப்பொருட்கள் சார்ந்த பாட அலகுகளின் விடயப் பரப்பு விரிக்கப்பட்டது அல்லது புதிதாக உள்வாங்கப்பட்டன. நவீனத்துக்கு முந்தைய இந்தியக் கலை பற்றிய மூன்று அலகுகள் முறையே கட்டடம், சிற்பம், ஓவியம் பற்றியதாக மாற்றியமைக்கப்பட்டன. அத்துடன் மூன்றாவது பாடத்திட்டத்தில் காணப்பட்ட "காலனிய மற்றும் பிற்காலனிய இந்தியக் கலை" என்ற பாட அலகானது இங்கு "இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் கலையும் தேசியவாதமும்" என்ற விடயக் குவிப்பான பாடஅலகாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று மேற்கத்தேய கலை, இலங்கைக் கலை பற்றிய அலகுகள் கால ஒழுங்கு அடிப்படையில் தலா நான்கு அலகுகளாக பிரிக்கப்பட்டிருந்தன. இதைத் தவிர 'மேலைத்தேய அழகியல்,' 'இந்திய அழகியல்,' 'காண்பியக்கலை பற்றிய இந்திய

*சாஸ்திரங்களும் நியமங்கள்,' 'தமிழர்களின் கலைப் பேறு,' 'கலை வரலாற்று ஆய்வு முறையும் வியாக்கியானமும்'* போன்ற ஏற்கனவே *அறிமுகமாகிய அலகுகளும் சிறப்புக் கலைப் பாடத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருந்தன.*

இப்பாடத்திட்டத்தில் *'காண்பியப் பண்பாடு* கோட்பாடு *அறிமுகம்,' 'கலையின் அர்த்தம்: காண்பியம் காண்பியத்துவம்,'* போன்ற *பிரதான அலகுகளும் 'கலையின் சமூகக்* கோட்பாடுகள்,' *'பொதிசெய்யப்பட்ட கைவினை,' 'காண்பியமாக்கப்பட்ட ஞாபகங்கள்: கலை, ஞாபகச் சின்னங்கள், ஞாபகங்கள்'* ஆகிய விருப்பத் தேர்வுக்கான *அலகுகள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டன.* போருக்குப் பிந்தைய *காலத்தில் அரச மற்றும் இராணுவ நினைவுச்சின்னங்களின் பரவுகையும் தமிழ் மக்களின் பொது இடங்களில் நினைவு கூறும் உரிமை மறுக்கப்பட்ட நிலையில் நினைவுச் சின்னங்களின் அரசியல் பற்றிய உலகளாவிய அனுபவங்களைப் புரிந்து கொள்வதை நோக்கமாகக் கொண்டு 'காண்பியமாக்கப்பட்ட ஞாபகங்கள்: கலை, ஞாபகச் சின்னங்கள், ஞாபகங்கள்' என்ற பாட அலகானது இணைத்துக்கொள்ளப்பட்டது. அதேபோன்று மூன்றாம் வருடத்தில் "கலை வரலாற்றுச் செயற்றிட்டம்" எனும் அலகு மாணவர்களின் ஆய்வுத் திறனையும் ஆய்வறிக்கை எழுதும் திறனை வளர்த்தெடுப்பதையும் நோக்கமாகக்கொண்டு அறிமுகம் செய்யப்பட்டது.*

*2011 இல் "இலங்கைக் கலை வரலாற்றை மீளச் சிந்தித்தல்: பொருட்கள், முறைமை மற்றும் அரசியல்[10] " எனும் தலைப்பில் சர்வதேசக் கருத்தரங்கை நுண்கலைத்துறை ஏற்பாடு செய்திருந்தது. இதில் முன்வைக்கப்பட்ட இலங்கைக் கலை பற்றிய மாற்று வாசிப்புகளின் அடிப்படையில் "ஈழத்தமிழரின் கலைப் பேறு" என்ற முன்னைய பாட அலகு "இலங்கைக் கலையின் பிற வரலாறுகள்" என்பதாக மாற்றியமைக்கப்பட்டது. இலங்கையில் விளிம்பு நிலையிலுள்ளோரின் கலை வெளிப்பாட்டிலும் இலங்கையின் எழுதப்பட்ட கலை வரலாற்றிலும் அதிக கவனத்தைப் பெறாத விடயங்களை இவ்வலகு கருத்திலெடுத்ததோடு எழுதப்பட்ட கலைவரலாற்றிலும் மீதான விமர்சனமாக அமைந்தது. மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் செய்யப்பட்ட புதிய ஆய்வுகளைக் கலந்துரையாடப்படுவதற்கான களத்தையும் வழங்கியது. விளிம்பு நிலை விடயங்களைப் பிரதான கலைவரலாற்றுச்*

[10] Conference abstracts, "Rethinking Sri Lanka Art Histories: objects, methods and politics"

சட்டகத்துக்குள்கொண்டுவருதல் என்பது முறையியல் மற்றும் ஆய்வு முறைமை சார் மறு விசாரணைகளுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகும். அந்தவகையில் இவ்வலகு சிறு மாற்றங்களுக்குட்படுத்தப்பட்டு 2020 ஆம் ஆண்டு இறுதிப் பாடத்திட்டத்தில்; 'இலங்கைக் கலை வரலாற்றின் வரலாற்றியல்' எனும் தலைப்புடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

1990களின் தொடக்கத்திலிருந்தே நுண்கலைத்துறை அதன் சமூக ஊடாட்ட வழிமுறையாக பல்வேறு வகையான காண்பியக் காட்சிகளை ஏற்பாடு செய்து வந்துள்ளது. காட்சிப் படிமங்கள் பற்றிய கற்கைப் புலம் என்ற அடிப்படையில் காட்சிப்படுத்தல் அதாவது ஆய்வு முடிவுகளை காட்சியினூடு முன்வைத்தல் அல்லது காண்பிய பண்பாட்டுப் பொருட்களை எடுத்தாளுவதினூடாக வரலாற்றையோ கருத்துருவையோ முன்வைத்தல் என்பது அதன் கற்றல், கற்பித்தல் முறைகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. இதனடிப்படையில் மாணவர்களின் காட்சிப்படுத்தல்சார் ஆற்றலை விருத்திசெய்யும் முகமாக 'எடுத்தாளுகை' (Curational practice)என்ற அறிமுறையும் செயல்முறையும் இணைந்த பாட அலகானது நான்காம் வருடத்தில் அறிமுகம் செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக மாணவர்களுக்கு கலைசார் நிறுவனங்கள், அரும்பொருளகங்கள், கலைக் கூடங்கள் என்பனவற்றில் தொழிற்பயிற்சியை வழங்குவதை நோக்கமாகக்கொண்ட 'தொழிற்பயிற்சி'(Professional placement) எனும் பாட அலகும் இணைக்கப்பட்டது. இந்த மாற்றங்கள் சர்வதேச பல்கலைக்கழகங்களிலுள்ள இத்துறைசார் அணுகுமுறைகளை உள்வாங்கும் முயற்சி என்பதோடு பாடத்திட்டத்துக்கு வெளியே விருப்பு முயற்சிகளாக இருந்த செயற்பாடுகளையும் அனுபவங்களையும் அவற்றின் துறைசார் மற்றும் உள்ளூர் முக்கியத்துவம் கருதி பாடத்திட்டத்தினுள் உறுதிப்படுத்தும் ஓர் முயற்சியாகும்.

**ஐந்தாம் பாடத்திட்டம்: ஊடாட்டச் சங்கிலியாகக் கலை வரலாறு**

2021 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 'நுண்கலை' என்ற பெயரில் கற்பிக்கப்பட்ட இளமாணிக்கற்கைநெறியை 'கலை வரலாறு' என பெயர் மாற்றம் செய்ய பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு அனுமதியளி -த்ததினூடு இதுவரை 'நுண்கலை' என்ற பெயரில் இருந்த பாடவிதானம் சர்வதேச பல்கலைக்கழகங்களில் 'கலை வரலாறு' என்ற பாடநெறிக்குரியது என்பதை அது ஏற்றுக்கொண்டது. இதனால் 2020

இல் அறிமுகப்படுத்தப்பட்ட பாடத்திட்ட சீர்திருத்தத்தில் கலை வரலாற்றுப் பட்டதாரிகளில் எதிர்பார்க்கப்படும் பண்புகள், பாடத்திட்டத்தின் நோக்கங்கள், மாணவர்களின் அடைவு மட்டங்கள் என்பன கலை வரலாறு சார்ந்து திட்டமிடப்படவும் அதை அடிப்படையாகக்கொண்ட பாடத்திட்டம் உருவாக்கப்படவும் ஏதுவானது. அத்தோடு முதலாவது பாடத்திட்டத்தினைப் போன்று இங்கு மீளவும் பொது, சிறப்புக் கலைமாணி மாணவர்களுக்குத் தனித்தனியான பாடத்திட்டம் மீள் அறிமுகப்படுத்தப்பட்டது ஆனால் இங்கு கோட்பாடு சார் அலகுகளும், தொழில்வாய்ப்பு சார் அலகுகளும் முன்னுள்ள பாடத்திட்டங்களைவிட அதிகம் கவனம் பெற்றுள்ளன (படம். 1).

புதிய பாடத்திட்டத்தில் முன்னைய பாடத்திட்டங்களில் மேற்கத்தேயக் கலை, இந்தியக் கலை, இலங்கைக் கலை என வரலாறு சார்ந்திருந்த பாட அலகுகளின் அணுகுமுறைகள் வரலாற்று மீதான ஆய்வினை (மேலைத்தேய, இந்திய மற்றும் தென்னாசியக் கலை) அடிப்படையாகக் கொண்ட பாட அலகுகள், 'பாக்குநீரிணை: கலைப் பரிமாற்றத்தின் இடம்,' 'காண்பியமாக்கப்பட்ட உடல்: பொருள் மற்றும் விடயம்,' 'அதிகாரமாகக் கட்டடக்கலை,' 'கலையில் நிலவுருவின் பிரதிநிதித்துவம்,' 'கைவினை: கருத்தாடலும் பயில்வும்,' 'கலை, அடையாளம், மற்றும் தமிழ்த்துவம்,' போன்ற விடய குவிப்பான பாட அலகுகள் என இரண்டாகப் பிரிக்கப்பட்டன. விடயக் குறிப்பான பாட அலகுகள் கால, பிரதேச பாகுபாடின்றி வெவ்வேறு உதாரணங்களை முன்வைத்து குறித்த விடயத்தை ஒப்பியல் மற்றும் கோட்பாட்டு அடிப்படையில் ஆராய்கின்றன. இது மாணவர்களின் கற்றல் மட்டங்களுடன் கற்றல் பேறுகளை இணைக்க உதவுவதுடன் கலை வரலாற்றைப் பிற வரலாறுகளுடன் பிணைக்கப்பட்ட ஒன்றாய் முன்வைத்தது. மேலும் இது வரை காலமும் இல்லாத அளவிற்கு மேற்கத்தேயம் சாராத உள்ளடக்கங்களைப் பற்றிப் பேசுவதற்கான வாய்ப்பையும் இது வழங்கியது. மாணவர்களின் கற்றல் மட்டங்களுக்கேற்ப ஏற்கனவேயிருந்த சில கோட்பாடுசார் அலகுகளான 'கலையின் அர்த்தம்: காண்பியம் காண்பியத்துவம்,' 'கலையும் சமூகக் கோட்பாடுகளும்,' ஏற்கனவேயிருந்தவற்றிலிருந்து சில மாற்றங்களுக்குட்பட்டதாக 'கலை வரலாற்று ஆய்வு முறைகள், முறையியல் மற்றும் வியாக்கியானம்', 'அழகியல் கோட்பாடுகள்', 'உளவியல் பகுப்பாய்வும் கலையும்', 'காண்பியத் தொடர்பாடல்', 'கலை வரலாறு மற்றும் காண்பியப் பண்பாட்டுக்கான ஆய்வு முறைமைகள்', 'கலைக் கோட்பாடு' போன்ற புதிய அலகுகளும்

*அறிமுகம் செய்யப்பட்டு மாணவர்களை சமகாலக் கோட்பாடுகளுடன் பரீட்சயப்படுத்த முயல்கின்றன.*


*"இலங்கையில் பெண் தெய்வங்கள் மற்றும் வழிபாடு: சடங்கு, பிரதிநிதித்துவம்" எனும் தலைப்பிலான நான்காவது கருத்தரங்கு 2014 இல் நுண்கலைத்துறையால் ஒழுங்கு செய்யப்பட்டது. இது மானுடவியல், மதம்சார் கற்கைகள், வரலாறு, ஆற்றுகைக் கற்கைகள், காண்பியப் பண்பாடு எனப் பல துறைகள் இடைவெட்டும் ஆய்வுகளை முன்வைத்ததுடன் கலை வரலாற்றின் பன்மைத்துவ அணுகுமுறைகளைப் பரீட்சிக்கும் களமாகவும் விரிவாக்கம் செய்யும் முயற்சியாகவும் அமைந்தது[11]. 2018 இல் நுண்கலைத்துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட "மரபா அல்லது மாற்றமா? கைவினை, பயில்வு மற்றும் கருத்தாடல் " எனும் சர்வதேசக் கருத்தரங்கம் கலையின் எதிர்ப்பதமான கைவினை மீது புலமைசார் ஆர்வத்தைச் செலுத்தியதன் ஊடாக கலை வரலாற்று எழுத்தியலின் பக்கச் சார்புகளையும் முற்கற்பிதங்களையும் திரைவிலக்க முயன்றது[12]. மேலும் ஒடுக்கப்பட்டோரின் வரலாறு மற்றும் அறிவு பற்றிய தேடலில் கைவினையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளும் தருணமாக இது அமைந்தது. இதன் தொடர் விளைவாகவும் ஆரம்பப் பாடத்திட்டங்களில் காணப்பட்ட இலங்கை பற்றியதாக அமைந்த கைவினை பற்றிய பாட அலகை உலகளாவிய போக்குகளுடன் இணைக்கும் முயற்சியாகவும் 2020 ஆம் ஆண்டுப் பாடத்திட்டத்தில் பொதுக் கலைமாணி மாணவர்களுக்கு "கைவினையின் சமூக உற்பத்தி" எனும் பாட அலகும் சிறப்புக் கலைமாணி மாணவர்களுக்கு "கைவினை: கருத்தாடல் மற்றும் பயில்வு" எனும் பாட அலகும் அறிமுகப்படுத்தப்பட்டன.*

*கலை வரலாறு என்பது எழுதும் திறனை அடிப்படையாகக் கொண்டதாகும். மாணவர்களின் விமர்சன ரீதியிலான எழுத்;தாற்றலைப் படிப்படியாக வளர்த்;தெடுப்பதை நோக்கமாகக்கொண்டு 'கலை வரலாற்று எழுத்தியல்' என்பது புதிய கலைத்திட்டத்தில் உள்ளார்ந்த மதிப்பீட்டின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்பட்டுள்ளது. இவை கலைச் செயற்றிட்டம், ஆய்வுக் கட்டுரை என்பவற்றை எழுதவும் பத்திரிகைகள், ஆய்வேடுகள் போன்ற வெளியீடுகளுக்கு மாணவர்கள் தமது ஆக்கங்கள், கலை விமர்சனங்களை எழுதி வெளியிடுவதற்கும் வழிகாட்டியாக அமைகின்றது. மேலும் கற்றல் கற்பித்தல் முறைகளை*

---

[11] National Seminar on "Female Deities & Devotion in Sri Lanka: Ritual, Representation & Resilience."

*நோக்கும் போது விரிவுரைகள் என்ற நிலையிலிருந்து முன்னேறி கள ஆய்வுகள், ஞாபக நடைகள், செயன்முறை என்பவற்றை உள்ளடக்கிய*




*பாடத்திட்டமாகவும் தொழில்சந்தைக்கான மாணவர்களை உருவாக்குதல் பற்றி மேலும் கவனத்தைக் குவித்துள்ள பாடத்திட்டமாகவும் இது உள்ளது (படம். 1).*

**முடிவுரை**

*மொத்தத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலை வரலாற்று கற்கை நெறியானது தென்னாசியாவில் உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் இத்துறையை நிறுவ எடுத்த முன்னோடி முயற்சிகளில் ஒன்று என்பதுடன் தமிழில் கலை வரலாற்றைப் பேச எடுத்த முதல் முயற்சியும் ஆகும். அந்தவகையில் உலகளாவிய இத்துறைசார் ஆய்வு முயற்சிகளும் சர்வதேசப் பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டங்களும் இதன் பாடத்திட்டங்களில் செல்வாக்கு செலுத்திய அதேவேளை உள்ளூர்த் தேவைகளும் நுண்கலைத்துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட காட்சிகள், கலந்துரையாடல்கள் மற்றும் கருத்தரங்குகள் என்பன தொடர்ந்து காத்திரமான உள்ளூர் விசைகளைச் செலுத்தியுள்ளன. ஒருவகையில் இம்முயற்சிகள் பொது நிலையில் கலை வரலாறு என்ற கற்கைப் புலத்தின் உலகலாவிய எதிர்பார்ப்புகளை கருத்திலெடுக்கும் அதேவேளை அவற்றை உள்ளூர்த் தேவைகளுக்காக குறிப்பாக குரலிழந்த சமூகத்திற்கான குரலாக எவ்வாறு மாற்றுவது என்ற சுட்டிப்பான தேவையினைக் கருத்திலெடுத்துள்ளன. அந்தவகையில் எழுதப்பட்ட வரலாற்றை மாணவர்களுக்குக் கடத்தல் என்பதிலிருந்து அவற்றின் பண்பாட்டு அரசியலை விளங்கிக்கொள்ளல் என்பதாக இக்கலைத் திட்டங்களின் முன்வைப்புகள் மாறிவந்துள்ளதை*

நோக்கமுடியும். மேலும் கலை வரலாற்றின் ஆய்வுப் பரப்பு, ஆய்வு முறையில் அதனூடு இயங்கும் அதிகாரக் கருத்தியல் என்பன இப்பாடத்திட்டங்களுடன் சவால் விடப்படுவதும் மாற்றியமைக்கப்படுவதும் நிகழ்ந்து வருகிறது. இதற்குச் சமகாலத்தில் மொழியியல், பண்பாட்டுக் கற்கைகள், தொடர்பாடல், காட்சி மானுடவியல் போன்ற துறைகளில் ஏற்பட்டுவரும் கருத்தாடல் மாற்றங்களையும் மார்க்ஸியம், பெண்ணிலைவாதம், பிறகட்டமைப்புவாதம் போன்ற கோட்பாட்டு சட்டகங்களை உள்வாங்குவதும் வலுச்சேர்க்கிறது.

**துணைநூற்பட்டியல்**


Department of Fine Arts. (1997) *Proposed curriculum of the Department of Fine Arts for general and special, 1997/1998*, Department of Fine Arts: University of Jaffna.

Narangoda, P. and Ferdinando, I. (2021) 'Fine Arts: In search of beauty', in de Sliva, P., Dharmadasa, K. N. O. Tilakaratne, A. Nahallage, C, and Hewagamage, W. (eds.) *Beyond boundaries: One hundred years of humanities and social sciences in Sri Lankan universities*. Colombo: University Grants Commission, pp. 296.

Preziosi, D. (1998) 'Art history: Making the visible legible', in Preziosi, D. (ed.) *The Art of art history: a critical anthology*. Oxford; OUP, pp 1-7.

Sanathanan, T. (2009) *Subject review report: Department of Fine Arts*. Faculty of Arts: University of Jaffna. Available at: https://www.eugc.ac.lk/qac/downloads/reports /SR-Reports/JFN/ arts/dep_fine_ arts.pdf (Accessed: 19 April 2022).

Sanathanan, T. (ed.) (2011) *Rethinking Sri Lanka art histories: objects, methods and politics - Conference Abstract*. Jaffna, 4-5 March 2011. Department of Fine Arts, University of Jaffna. Unpublished.

Sanathanan, T. (ed.) (2014), *National seminar on female deities & devotion in Sri Lanka: ritual, representation & resilience - Conference Abstract.* Jaffna, 24-26 April 2014. Department of Fine Arts, University of Jaffna. Unpublished.

Sanathanan,T. A. and Ayesha Abdur Rahman (eds.) (2018) *Tradition or trans/ formation? craft, practice and discourse - Conference Proceedings*. Jaffna, 10-12 May 2018. Department of Fine Arts: University of Jaffna.

Williams, R. (1983) *Culture and society, 1780-1950.* New York: Columbia University Press.

*சிவத்தம்பி, கா. (1995) யாழ்ப்பாணத்தில் புலமைத்துவ மரபு ஓர் இலக்கிய வரலாற்றுக் கண்ணோட்டம். நுகேகொட: சுதந்திர இலக்கிய விழா அமைப்புக் குழு.*

*சூழமைவுபடுத்துதல்: யாழ்ப்பாணக் கட்டடக்கலைப் பாணிகளும் அம்சங்களும் கருத்தரங்கு கையேடு (2002), நுண்கலைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (பிரசுரிக்கப்படாதது)*